1987 மார்ச் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, 722 வேளாண்மைத் தொழில் கூடங்கள் இயங்கி வருகின்றன. 20 அம்சத் திட்டத்தின் கீழ் உழவுக் கருவிகள் வழங்குவது, மற்றும் விதை வினியோகம், உரம் வினியோகம், சப்சிடி போன்றவற்றை வழங்குவது போன்ற பலவற்றை அரசு செய்துகொண்டு வருகிறது. அந்த வகையில் பல இடங்களில் ஒழுங்காக இருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. அப்படி ஒழுங்காக இல்லை என்று எந்த இடத்திலாவது தகவல்கள் வருமேயானால் அதற்குத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது.

விளம்பரங்களைப் பொறுத்த வரையில் வானொலியில் காலை 7 மணிக்குள்ளாக எங்கெங்கே, என்னென்ன பொருள்களைக் கொடுக்கிறார்கள், உரங்கள், விதைகள், டிராக்டர்கள் போன்றவை எங்கெங்கே கிடைக்கின்றன என்பதை நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம். வானொலியைக் கேட்பவர்கள் அறியலாம் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் அலுவலர்களுக்கு வைப்புநிதி வட்டியை அதிகரித்தல்.

26—(*வினா எண். 4832) திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், அலுவலர்களின் வைப்புநிதி வட்டி விகிதத்தை 5 சதவீதத்திலிருந்து 10.5 சதவீதமாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அரசு அலுவலர்களைப் போன்று, பொது வருங்கால வைப்புநிதியாக 1987–88-லிருந்து மாற்றி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு உதவி பெறுகிற தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் கிடைக்கிற வீடு கட்டுகிற லோன், திருமணக் கடன் போன்ற பல்வேறு சலுகைகள் நடைமுறையில் கிடைப்பதில்லை. ஒரே பணியைச் செய்கின்ற ஒரே துறையைச் சேர்ந்தவர்களுக்கு இருவித அளவுகோல் என்பது நியாயத்திற்குப் புறம்பானது ஆகும். எனவே, அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற

ஆசிரியர்களுக்குள்ள அனைத்து சலுகைகளும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்ற தெளிவான உத்தரவை அரசு பிறப்பிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழ்நாட்டில் இருந்து வந்த குறைபாடு. சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின்போது பல குறைகளைக் களைந்து ஆணையிட்டு இருக்கிறார்கள். இதிலே இருவித அளவுகோல் ஆசிரியர்கள் மத்தியில் இருக்கக் கூடாது என்பதுதான் அரசினுடைய கொள்கை. இதற்கு ஏற்கனவே போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. சுப்பராயன் : தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றைக்கு வரைக்கும் அவர்களுக்கு விடிவு வரவில்லையென்பதால் இனியொரு சுதந்திரம் என்ற முறையிலேயாவது அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்கும் என்று உறுதிப்படுத்த, தெளிவாக அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அத்தகைய சுதந்திரத்தை அவர்களுக்குத் தரவேண்டுமென்ற நல்ல உள்ளத்திற்குச் சொந்தக்கார ஆட்சிதான் இங்கே நடக்கிறது. சென்ற ஆண்டு அதனால்தான் மாண்புமிகு முதல்வர் அந்தச் சலுகைகளை அளித்தார்.

தாம்பரத்தில் குற்றவியல் நீதிமன்றம்.

27—(*வினா எண். 8397—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தாம்பரம் நகரத்தில் தற்போது தனியாக முறையான குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடமில்லை.